# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

**இல. 7,352 — 1923 ம் ௵ புரட்டாதிமீ 28 ந் திகதி வெள்ளிக்கிழமை.**


## Part IV. — நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1892 ம் ௵ சிறுபட்டண சுகாதார சட்டம்.

1892 ம் ௵ சிறுபட்டண சுகாதார சட்டத்தின் 5A, 9E (2) பிரிவுகளின்படி முல்லைத்தீவு டிஸ்திறிக்கின் சுகாதார சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டு அதிகார மந்திரசபையோடுகூடிய தேசாதிபதியவர்களால் அனுமதிக்கப்பெற்ற பிரமாணங்களும் சலார்முறை அட்டவணையும்.

உத்தமனரது கட்டளைப்படி,

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1923 ம் ௵ ஆவணிமீ 30 ந் வ.

சிசில் கிளைமென்றி,
கலோனியல் சக்கிறுத்தார்.

குறிக்கப்பட்ட பிரமாணங்கள்.

1 ம் அதிகாரம். (9 ம் பிரிவு E (2) (*a*)).

கூட்டங் கூடவேண்டிய நேரமும், இடமும், கூட்டத்தில் அனுசரிக்கப்படவேண்டிய ஒழுங்குகளும்.

1. சங்கத்தின் சாதாரண கூட்டங்கள் சங்கத்தாரால் காலத்துக்குக்காலம் நிர்ணயிக்கப்படும் நாட்களிலும், நேரத்திலும், இடத்திலும் கூடப்படும். யாதொரு விசேஷ கூட்டம் சங்கத்தலைவரின் இஷ்டப்படி, அல்லது, சங்கத்தின் இரண்டு அங்கத்தவர் எழுதிக்கேட்கும் வேண்டுகோளின்படி கூடப்படும். ஆயினும், சங்கம் எந்தக்கூட்டத்தையும், வேறொரு நாளுக்கு அல்லது மணித்தியாலத்துக்குப் பின்போட்டு வைத்தல் நியாயமுறையாகும்.

2 சங்கத்தோடுசேர்ந்த சகல கருமங்களுக்கும் அங்கத்தவரின் முதன்மை ஒழுங்கு பின்வருமாறு.

(*a*) உத்தியோக முறைப்படி சங்கத்தலைவர்.
(*b*) தேசாதிபதியினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் தத்தம் பெயர் "கெசற்" பத்திரிகையில் பிரசித்தப்படுத்தப்பட்ட ஒழுங்கின்படி.

3. சங்கத்தலைவர் ஒழுங்கு காத்து ஒழுங்கு முறையிலே நிகழுங் கேள்விகளுக்குத் தீர்ப்புச்சொல்ல வேண்டும்.

4. யாதொரு சாதாரண அல்லது விசேஷ கூட்டத்துக்கு நியமிக்கப்பட்ட மணித்தியாலத்தின்பின், கூட்டங்கூட வேண்டியவர்கள் கூடி சங்கத்தலைவராயிருக்க உரித்துடையவர் தம் ஆசனத்தில் உட்கார்ந்தபின், சங்கம், கருமம்பார்க்கத் தொடங்கி நடத்தவேண்டும். கூட்டத்துக்கு நியமிக்கப்பட்ட மணித்தியாலத்திலிருந்து அரைமணி நேரத்துக்குப்பின்னும், கூட்டங்கூட வேண்டியவர்கள் வந்து சேராவிட்டால், கூட்டம் சாதாரண கூட்டமாகில் அடுத்த சாதாரண கூட்டத்துக்கு நியமிக்கப்பட்ட நாளுக்கும் விசேஷ கூட்டமாகில் குறிக்கப்படாத ஒரு நாளுக்கும் தவணை போட்டப்படவேண்டும்.

5. கூட்டம் நடக்கும்போது, தர்க்கத்தில் அல்லது அவசியமெனக் கண்டால், சங்கத்தின் விசேஷ அநுமதியோடல்லாது, ஒரு கேள்வியைக்கேட்க அல்லது ஒரு கருமத்தைத் தொடக்க விரும்பும் எந்த அங்கத்தவரும், அவ்வித கேள்வியைப்பற்றி அல்லது தொடக்க இருக்குங் கருமத்தைப்பற்றி சங்கத்தின் முந்திய கூட்டம் ஒன்றில் அறிவித்தல் கொடுக்க வேண்டும். அல்லது அவ்வித கேள்வியைக் கேட்க அல்லது கருமத்தைத் தொடக்கத் தான் எண்ணியிருக்கும் நாளுக்கு குறைந்த பட்சம் நாலு நாட்களுக்கு முந்தியாவது எழுத்தில் அறிவித்தல் கொடுக்கவேண்டும்.

6. அவ்வித அறிவித்தல் கொடுக்கும் எந்த அங்கத்தவரும், அந்தக் கேள்வி அல்லது, தொடக்க இருக்குங் கருமம் எழுதிய பிரதியொன்றைச் சங்கத்தலைவருக்குக் கொடுக்க வேண்டும்.

7. சங்கம் வேறுவிதம் தீர்மானியாதிருந்தால் ஒரு கூட்டத்தில் கேட்கப்படும் எல்லாக் கேள்விகளும், தொடக்கப்படும் எல்லாக் கருமங்களும், அவைகளைப்பற்றிக் கொடுக்கப்பட்ட ஒழுங்கின்படி நடத்தப்படல் வேண்டும்.

8. ஒரு கூட்டத்திலே தள்ளிவிடப்பட்ட ஒரு கருமம், குறைந்தபட்சம் மூன்று மாசங்கள் கழிந்தாலன்றி மறுபடி துவக்கப்படாது. சங்கத்தால் ஒத்துக்கொள்ளப்பட்ட கருமம் ஒன்றுக்கும் எவ்விதமேனும் விரோதமாயிருக்கும் யாதொன்றும் மேற்குறித்த காலம் போகுமுன் ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது.

9. யாதாமொரு அங்கத்தவர் மன்றுட்டுப் பத்திரத்தை அல்லது வேறு கடிதத்தைக் கொடுத்தால் அதன் மரியாதையான மாதிரிக்கு அவரே பாத்திர வாளியாயிருப்பார். எழுதுகிறவருடைய பெயரும் விலாசமும் தெளிவாய் வரைந்திருக்காமல், சங்கத்தின் முன் யாதொரு பத்திரமும் போடப்படாது.

10. சாதாரண கூட்டங்களின் கருமங்கள் பின்வரும் ஒழுங்கின்படி நடத்தப்படல் வேண்டும்:—

(*a*) நேரே முந்திய கூட்டத்தின் குறிப்புகள் வாசிக்கப்பட்டு, ஆவசியமானால் திருத்தப்பட்ட பின் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(*b*) மன்றுட்டுப் பத்திரங்கள், பிட்டிசங்கள், அல்லது சங்கத்துக்கு விலாசமிடப்பட்ட வேறு கடிதங்கள், கூட்டத்தின் முன் வைக்கப்பட்டு அவைகளில் கட்டளைகள் வரையப்படல் வேண்டும்.

(*c*) பின்வரும் ஒழுங்குப் புத்தகத்தில் சொல்லப்பட்ட நிரையின்படி மற்றும் கருமங்கள் கவனிக்கப்படல் வேண்டும்.

11. ஒவ்வொரு கூட்டத்திலும், தர்க்கத்துக்குட்படும் கருமங்கள் பதியப்பட்டு வரிசையாய் இலக்கமிடப்பட்டு வைக்க ஒரு ஒழுங்குப் புத்தகமிருக்க வேண்டும்.

12. லிகிதர் ஓர் குறிப்புப் புத்தகம் வைத்திருத்தல் வேண்டும். அதில் சங்கத்தின் கருமங்கள் பதியப்படல் வேண்டும். சங்கத்தின் ஒவ்வொரு கூட்டத்தின் குறிப்புகளும், புத்தகத்தில் வரையப்பட்டபடி, பின்வரும் எந்தக் கூட்டத்திலும் உறுதிப்படுத்தப்பட்ட பின், அவ்விதம் உறுதிப்படுத்தப்பட்ட கூட்டத்தின் அக்கிராசனரால் கைச்சாத்திடப்படல் வேண்டும்.

13. சங்கத்துக்கு விலாசமிடப்பட்ட எல்லா முறைப்பாடுகளையும், சங்கத்தின் உத்தியோகஸ்தரால் செய்யப்பட்ட எல்லா றிப்போட்டுகளையும் சங்கத்தின் முந்திய கூட்டத்தின்பின் சங்கத் தலைவரால் எடுத்துக்கொள்ளப்பட்ட யாதொரு கருமத்தின் குறிப்புகளையும், லிகிதர் கூட்டத்தின் மேசைமேல் வைக்கவேண்டும்.

14. ஒவ்வொரு விசேஷ கூட்டத்தையும்பற்றிய அறிவித்தல் ஒவ்வொரு அங்கத்தவருக்குங் கொடுக்கப்படல் வேண்டும். அல்லது ஒவ்வொரு கூட்டத்துக்கும் நியமிக்கப்பட்ட நாளுக்குக் குறைந்தபட்சம் இரண்டு நாட்களுக்கு முந்தியென்கிலும், ஒவ்வொரு அங்கத்தவர் வீட்டிலும் விடப்படல் வேண்டும்.

## 2 ம் அதிகாரம். (9 ம் பிரிவு E (2) (*b*)).

### வேலைகள், தெருக்கள், வீதிகள், பாலங்கள் செய்தல்.

1. ஏற்கனவே ஆயத்தப்படுத்தப்பட்டு சங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்புகளிலிருந்து, பிரசித்த வேலைகளுக்குக் கொடுக்கவேண்டிய பணம் கொடுக்கப்பட வேண்டும்.

2. சங்கத்தலைவரின் எழுத்திலே உத்தரவு பெற்ற எவரும், காலை ஏழு மணி தொடக்கம் மாலை ஐந்து மணி வரையும், அவசியமான தக்க வேலையாட்களுடனும், கூலிக்காரருடனும், வேலைக்காரரோடும், வண்டிகள், மிருகங்கள், இன்னும் மற்றைய உபகரணங்களோடும், சங்கத்தின் ஆட்சிக்குட்படவுள்ள அல்லது போட நினைத்திருக்கும், தெருவுக்கருகாண்மையாயுள்ள அல்லது கிட்டிய எந்தக் காணிக்குள்ளும்போய் அங்கே யொரு தெருவைக்கீற, அளக்க, செய்ய, வேலை பார்க்க, திறக்க, மாற்ற, திருப்ப பழுதுபார்க்க, துப்பரவாக்க, திருத்த அல்லது வேலிபோட ஒரு பாலத்தைக்கட்ட, வெட்ட, பழுதுபார்க்க, துப்பரவாக்க அல்லது அத்தெருவில் ஒரு வேலியை, கானை, கட்டை, கிடங்கைத் திருத்தவாகிய இக்கருமங்களுக்காகத் தேவையான சகல காரியங்களையும், கருமங்களையும், ஒருமித்து அல்லது தனித்து நடத்தத் தத்துவமுண்டு. மேலும், அவர்கட்கு றோட்டோடு எது விதத்திலும் சேர்ந்த வேலையைச் செய்யவும், இந்தக் கட்டளைச் சட்டத்தின் கீழ் என்னகாரியத்தையும், பணிவிடையையும் அலுவலையும் செய்யத் தத்துவமுண்டு.

3. உள்ள அல்லது போட நினைத்திருக்குந் தெருவைக்கீற, அளக்க, செய்ய, வேலைபார்க்க, திறக்க, மாற்ற, திருப்ப, பழுதுபார்க்க, துப்புரவாக்க அல்லது திருத்த, கட்ட, வெட்ட, அந்த றோட்டிலிருக்கும் பாலத்தை, வேலியை, கானை, கட்டை கிடங்கை, பழுதுபார்க்க, திருத்த அல்லது வேறு அத்தோடு சேர்ந்த வேலைகளைச் செய்யும்பொழுது அவ்வேலைகள் பார்க்குமிடத்திலிருந்து எடுக்கப்படவேண்டிய மண், குப்பை அல்லது வேறு சாமான்களை, அருகாண்மையாயுள்ள அல்லது கிட்ட இருக்கும் எந்த நிலத்திலும் போட, மேற்சொன்னபடி உத்தரவுபெற்ற ஆள் அல்லது ஆட்களுக்குத் தத்துவமுண்டு. ஆனால் அப்படியான மண், குப்பை, அல்லது வேறு சாமான்கள் நியாயமான காலத்துக்குள் அப்புறப்படுத்தப்படவேண்டும்.

4. உள்ள அல்லது போட நினைத்திருக்கும் தெருவுக்குக்கிட்டவாக இருக்கும் காணிக்கூடாக, அத்தெருவோடடுத்த என்ன பணிவிடையும் நடத்துங் காலத்தில் ஏதாவது அந்நேரத்துக்கு வேண்டிய தெருவொன்றுபோட, எழுத்திலே சங்கத்தலைவரின் உத்தரவுபெற்ற எவருக்குந் தத்துவமுண்டு. இருந்தாலும், அப்படியாக நேரத்துக்குவேண்டிய றோட்டு, கட்டிடம், இருக்குந்தரைக்கூடாகவும், சுற்றி அடைபட்ட தோட்டம் அல்லது வளவுக்கூடாகவும் போடப்படக்கூடாது.

5. தெருவுக்கருகாமையாயுள்ள மரங்கள், பற்றைகள், அல்லது செடிகளையும், இலைகள், கொப்புகள், மரத்தின் வேர்கள், அத்தெருவில் அல்லது அதற்கு மேலாகத் தூங்கி அதற்கொரு தடையாக அல்லது மோசமாக இருந்தால், அவைகளை வெட்டி யெடுத்துக் கிட்ட உள்ள எந்த நிலத்திலும் வைக்கச் சங்கத்தலைவரின் எழுத்திலே விசேஷ உத்தரவுபெற்ற எவருக்கும் உத்தரவுண்டு இம்முகாந்தரத்துக்காக, அப்படியான மரங்கள், பற்றைகள் செடிகள், இலைகள், கொப்புகள், வேர்களை அப்புறப்படுத்தத் தேவையான ஆட்களோடும், மிருகங்களோடும், ஆயுதங்களோடும் எந்தக் காணிக்குள்ளும், வளவுக்குள்ளும் புகுரத் தத்துவமுண்டு.

6. சங்கத்தலைவரின் எழுத்திலே உத்தரவுபெற்ற எவருக்கும், தான் தேவையென்று நினைக்கும் எந்நேரத்திலும், எந்தத் தெரு ஓரத்திலும் வேலியடைப்பு, கிடங்கு, கான், அல்லது கட்டுப்போடத் தத்துவமுண்டு.

7. சங்கத்தலைவரின் எழுத்திலே விசேஷ உத்தரவுபெற்ற எவருக்கும், கான்கள் நீரோடைகள் செய்யவும், துப்புரவாக்கவும், அல்லது யாதொரு தெருவை, தண்ணீர் வாய்க்காலைக் காப்பாற்ற, திருத்த, பழுதுபார்க்க, அல்லது செய்வதற்காகத் தான் தேவையென்று நினைக்கிற பாலங்கள் செய்யவும், அப்படியானவைகளை அப்படிப்பட்ட உள்ள அல்லது செய்யவென்றிருக்கிற எந்தத் தெரு, நீர்வாய்க்காலுக்குக் கிட்டவாகவுள்ள காணி பூமிக்குள்ளே சரிபண்ணவுந் தத்துவமுண்டு.

8. சங்கத்தலைவரின் எழுத்திலே விசேஷ உத்தரவுபெற்ற சங்கத்தின் எந்த உத்தியோகஸ்தருக்கும், எந்த றோட்டிலும், என்ன காரியத்தையும், என்ன சாமானையும் வைத்து, அச்சாமானை, அவ்றோட்டுப் பழுதுபார்த்து முடியும் வரையும், அப்பழுதுபார்ப்புத் துவங்கி முடிக்கிறகாலத்துக்கு முந்திப்பிந்தி அப்பழுதுபார்ப்பை இலேசுப் படுத்தத் தேவையாயிருக்கும், அல்லது கொஞ்சக்காலத்துக்குமுன்னே பழுதுபார்க்கப்பட்ட தெருவுக்கு, அழிவு வராமல் காப்பாற்றுதற்காக அச்சாமான்களைக் கிடக்கவிடத் தத்துவம் உண்டு. ஆனால் றோட்டாற் போகிறவர்களுக்கு யாதும் அபாயம் அல்லது நட்டம் வராதபடி தடுக்கப் போதியளவு நியாயமான கவனம் எடுக்கவேண்டும்.

9. மேற்சொல்லியபடி உத்தரவு பெற்ற எவருக்கும், தன்னால் அல்லது தன் கீழ்வேலைகாரர், கூலிக்காரர், கையாட்களாக இருப்பவர்களுடனும், தேவையான சரியான வண்டிகளுடனும் மிருகங்கள், மற்றும் வழிவகைகளுடனும், காலை

ஏழு மணி துவக்கம் மாலை ஐந்து மணி வரையும், உள்ள அல்லது போட இருக்கிற தெருவைக்கிற, அளக்க, செய்ய, வேலை பார்க்க, திறக்க, மாற்ற, திருப்ப, பழுதுபார்க்க, துப்புரவாக்க, தேற்ற, அடைக்க, அல்லது இவைக் குதவியாகும்படி ஏதும் செய்ய அல்லது அத்தெருவில் கட்ட, வெட்ட, பழுதுபார்க்க, துப்புரவாக்க, அல்லது அதிலுள்ள ஓர் பாலத்தை, வேலியை, கானை, கட்டை, கிடங்கைச் செய்ய அல்லது அத்தெருவோடுசேர்ந்த, வேலைபார்க்கிற சங்கத்து உத்தியோகஸ்தரின் பாவிப்புக்குத் தேவையான நிரைகள், கட்டிடங்கள் அல்லது, அவரின் ஊழியத்திலிருக்கும் வேலைகாரர், வண்டி, ஆட்கள், சாமான்களினுடைய பிரயோசனத்துக்காக தண்ணீரை, மரத்தை, செடியை, கல்லை, மக்கியை, களியை, அல்லது வேறேதுஞ் சாமானை அத்தெருவுக் கருகாமையாயுள்ள, அல்லது கிட்டவிருக்கும் நிலத்தில் தேடி, கிண்டி, வெட்டி எடுத்துககொண்டு எவருடைய காணிக்கூடாகவும், அடாத்துக்காரனாக எண்ணப்படாமல் சுமந்துபோக உத்தரவுண்டு. அப்படி யிருந்தபோதிலும் கிட்டஉள்ள வெண்பூமி அல்லது பொதுவான, கைவிடப்பட்ட நிலங்களில் போதியளவு சாமான் வசதியாய்ப் பெற்றுக்கொள்ள இயலாவிட்டாலேயன்றி அப்படியான சாமானை யாதொரு வளவு வீட்டுக்குப் போகும் ஒடை, புல்லு, வீதியடைப்புக் குள்ளேயுள்ள காணி, நாட்டப்பட்ட பூமி, வயல் அல்லது கட்டிவிருந்து சொந்தக்காரனின் அநுமதியின்றி கிண்டி, வெட்டி எடுத்துக்கொண்டு போகப்படாது. வெண்நிலத்தில் சாமான்கள் எடுக்கிறதானால், உத்தரவுபெற்ற ஆள் அல்லது ஆட்கள், வசதியாய் எடுக்கக்கூடிய இடத்திலே அப்படிப்பட்ட சாமான்களை எடுத்துக்கொள்ளலாம். யாருக்கும் சொந்தமான பூமியென்றால், பூமியின் சொந்தக்காரனுக்கு, அவருடைய நிலத்திலிருந்து எடுக்கும் எல்லாச் சாமான்களுக்காகவும், அச்சாமான்களை எடுத்துக்கொண்டு போகும்பொழுது உண்டாகும் அழிவுக்காகவும், நியாயமான வந்தி இறுக்கப்பட வேண்டும். அப்படிச் சாமான்கள் எடுக்கப்படுங் கிடங்குகள் அல்லது சுரங்கங்களை, மனுஷனுக்கு அல்லது மிருகங்களுக்கு மோசம் வருவிக்காதபடி சுற்றிஅடைத்து அல்லது வேலிபோடப்பட்டிருக்கப்படல் வேண்டும்.

10. உள்ள அல்லது போட எண்ணியிருக்குந் தெரு, அல்லது றேட்டுக் கருகாண்மையால் அல்லது கிட்ட இருக்கும் எந்தக்காணிக் கூடாகவும், சங்கத்தலைவரின் எழுத்திலே உத்தரவுபெற்ற எந்த உத்தியோகஸ்தருக்கும், தான் தேவையென்று நினைக்கிறபடி எந்தத் தெருவை அல்லது றேட்டைக் காப்பாற்ற, அழியாமல்பார்க்க, திருத்த, பழுது பார்க்கிறதற்காக, அல்லது கட்டுகிறதற்காக, குழாய்கள், சுரங்கவாய்க்கால்கள், வேலிகள், பாலங்கள் செய்துவைக்கவும் எல்லாக் கிடங்குகளையும், பீலிகளையும், கான்களையும், நீர்ப்பாய்ச்சல்களையுஞ் செய்ய, துடைக்க, துப்புரவாக்க, அல்லது திறந்துவிடவும் தத்துவமுண்டு.

11. சங்கத்தலைவர் தேவையென்று நினைத்தால், எந்த வளவின் அல்லது, குடியிருக்கும் வீட்டுக்குக்கிட்ட இருக்கும் நிலத்தின் அல்லது ஒழுங்கையின் சொந்தக்காரனைத் தான் கட்டளையிடும்படியே அப்படியான வளவு, காணி, அல்லது ஒழுங்கையை, ஒப்புரவாக்க அல்லது மட்டப்படுத்தக் கேட்கிறதற்கும், அப்படியான வளவு, காணி, அல்லது ஒழுங்கைக்கு வடிகால்வைக்குங் காரணத்திற்காக, ஆகக்கிட்டிய பட்டணத்தின் கான், சாய்கடைமட்டும், போதிய கான்கள், அல்லது குழாய்கள் வைக்கும்படி கேட்கிறதற்கு சங்கத்தலைவருக்குத் தத்துவமுண்டு. அப்படியான கான் அல்லது குழாய் சங்கத்தலைவர் நியமிக்கும் காரணப்பொருளால் செய்யப்படும் குறித்த அளவுக்கும் மட்டத்துக்கும், சரிவுக்கும் இசைவாய் சொல்லப்பட்ட கான் அல்லது சாய்க்கடை வாய்க்காலோடு சேரும்வரைக்கும் கொண்டுபோய் விடப்பட வேண்டும். அப்படிப்பட்ட சொந்தக்காரனுக்கு அவர் போடவேண்டிய குழாய்களுக்குத் தேவையான சாமான்களைச் சங்கமே கொள்விலையின் விகிதத்துக்குக் கொடுக்க வேண்டும். அப்படியான சொந்தக்காரன் அப்படியான கட்டளைக்குக் குறித்த நேரத்துள் அமையாவிட்டால், சங்கத்தலைவர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் வளவுக்குள் புகுந்து தேவையான வேலையைச் செய்வித்தபின் அதன் செலவைச் சொந்தக்காரன் கொடுக்க வேண்டும்.

## 3 ம் அதிகாரம். (9 ம் பிரிவு E (2) (c)).

### கோதுமைஅப்பம் செய்வதையும் அதன் அளவையும் பற்றிய ஒழுங்கு.

1. கோதுமை அப்பஞ் செய்வதற்குப் பாவிக்கப்படும் மா, தண்ணீர், மற்றுஞ் சாமான்கள், நல்லவைகளாகவும், சுகத்துக் கேற்றவைகளாகவும், இருத்தல் வேண்டும். சங்கத்தலைவரால் எழுத்தில் அதிகாரங் கொடுக்கப்பட்ட எவரும், காலத்துக்குக்காலம் அதன் மாதிரியைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளுதல் நியாயமுறையாக இருக்கும்.

## 4 ம் அதிகாரம். (9 ம் பிரிவு E (2) (d) ).

### பிரசித்த சந்தைகளை ஸ்தாபித்தலும் அவைகளை நடப்பித்தலும், அப்பப்போறணை, தேய்த்தண்ணீர் கோப்பிக் கடைகளைக் கட்டுப்படுத்தலும்.

1. எப்போதாவது ஒரு பிரசித்த சந்தையை ஸ்தாபிக்கச் சங்கம் தீர்மானித்தால், அச்சந்தை துவக்கப்படும் காலத்தைப்பற்றிச் சங்கத்தலைவர் குறையாது பத்து நாட்களுக்கு முன் அறிவித்தல் கொடுக்கவேண்டும். அவ்வித அறிவித்தல் பறையடித்துப் பிரசித்தம் பண்ணப்படல் வேண்டும்.

2. யாதொரு சுகாதாரசங்கப் பட்டினத்துக்கு சங்கத்தால் ஒரு பிரசித்த சந்தை ஸ்தாபிக்கப்பட்ட பின் அப்பட்டின, எல்லைக்குள் சங்கத்தின் உத்தரவின்றி எவரும் தன்சந்தை வைக்கப்படாது.

3. பிரசித்த சந்தைகளெல்லாம் ஒவ்வொரு நாளும், காலை 6 மணி தொடக்கம், மாலை ஒன்பது மணி வரையும் திறந்திருக்க வேண்டும். சந்தைக்கு வேண்டிய வெளிச்சம் வைப்பதற்கு ஏற்பாடுசெய்தல் சங்கத்தின் அல்லது சங்கத்தின் குத்தகைகாரனது கடமையாகும்.

4. சங்கத்தின் ஊழியக்காரரினு லாவது, அல்லது அதன் குத்தகைகாரரினுலாவது, ஒவ்வொரு சந்தையிலும் இடப்பட வேண்டிய வாடகைகளும், கூலிகளும் ஓர் அட்டவணையாக, ஆங்கிலேய, சிங்கள, தமிழ் பாஷைகளிலே அச்சிடப்பட்டு ஒவ்வொரு சந்தையிலும், ஓர் பிரசித்தமான இடத்தில் வைக்கப்படல் வேண்டும். அவ்வித நொத்தீஸ் சொல்லிய தொகைக்குமேல் எவனாவது கேட்டலும் வாங்குதலும் நியாயமுறை யாகாது.

5. சங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட சந்தைகளில் இடப்படும் வாடகைகளும் கூலிகளும் பின்வருமாறு:—

பாவிக்கும் ஒவ்வொரு சதுரயார் நிலத்துக்கு ஒருநாளைக்கு ஒரு சதம்.

6. ஒரு பிரசித்த சந்தையிலே, கொடுக்கப்பட வேண்டிய பல வாடகைகளும், கூலிகளும், காலத்துக்குக்காலம் கேட்டவுடன் முற்பணமாக சங்கத்தலைவருக்கு அல்லது அதன் குத்தகைகாரனுக்கு அல்லது அப்பணத்தை அறவிடச் சங்கத்தால் அல்லது அதன் குத்தகைக்காரனால் தத்துவம்பெற்ற எவருக்கும் கொடுத்துப்போட வேண்டும்.

7. மேற்கூறிய நியமிக்கப்பட்ட வாடகை அல்லது கூலியைக் கட்டக் கடமைப்பட்டவன், கேட்டவுடன் கட்டாவிட்டால் சங்கம் அல்லது சங்கத்தலைவனால் அப்பணங்களைச் சேர்க்க உத்தரவு கொடுக்கப்பட்டோனாவது, அவ்வாடகை, கூலிகளைக் கொடுக்க வேண்டியவனுக்குச் சேர்ந்த, அல்லது அவன்வசத்தில் அல்லது காவலிலிருக்கும் எந்த அல்லது எல்லாச் சாமான்களையும் மதித்து விற்று அவனால் வரவேண்டிய பணத்தை அறவிடலாம்.

8. சந்தையில் ஒட்டப்பட்டுப் பிரசித்தப்படுத்தப்பட்ட நொத்தீசால் வைத்திருக்க அல்லது விற்பனை செய்யப்படாதென்று, தடைபண்ணியிருக்கும் எந்தப் பொருள்களையும், எவனும், சந்தையிலாவது, எந்தத் தொழுவத்திலாவது வைத்திருக்க அல்லது விற்பனவுக்காய் வெளியே வைத்திருக்கவும் படாது.

9. யாதொரு மீன் சந்தையிலாவது அல்லது தொழுவத்திலாவது புதிய மீன் அல்லது உப்பிட்ட மீனைத்தவிர வேறெந்த ஆகாரத்தையும், சாமானையும், வைத்திருக்க அல்லது விற்பனவுக்காக வெளியில் வைத்திருக்கப்படாது.

10. தாவர பழக்கடையில், அல்லது தொழுவத்தில், புதிய பழங்களையும், தாவரவஸ்துக்களையுந் தவிர புதிய அல்லது உப்பிட்ட மாமிசத்தையாவது, மீனையாவது, சமைக்கப்பட்ட எந்த ஆகாரத்தையாவது, வேறு எவ்வித ஆகாரத்தையாவது, ஒருவன் விற்கவும், விற்பனைசெய்வதற்காய் வெளியில் வைத்திருக்கவும் படாது.

11. ஒரு (கடை) தொழுவத்தைக் கையேற்றவர் சந்தையின் எப்பகுதியையாவது அடைக்கப்படாது. அல்லது எவ்வித மேற்கட்டியையாவது, மறைப்பையாவது, தாவரத்தையாவது கட்டப்படாது. மேலும், முதற் சங்கத்தலைவரின் உத்தரவு பெறாமல், என்ன சாமானையாவது, மாலை ஒன்பது மணிக்கும், காலை ஆறுமணிக்கு மிடையில் ஒருவன் சந்தையில் விடப்படாது.

12. சந்தையில் ஒரு (கடை) தொழுவத்தை, அல்லது இடத்தை, அல்லது ஆசனத்தை உடையோன், அவ்வித தொழுவத்தை அல்லது இடத்தை அல்லது ஆசனத்தை ஊத்தை அசங்கியின்றி துப்பரவாய் வைத்திருத்தல் வேண்டும். ஏதும், தொற்றுநோயால் வருந்துவோன், அல்லது ஓர் பிரசித்த சந்தையை நடத்துவோனின், அறிவுக்கு, சிலகாலங்களின்முன் ஏதும் தொற்றுநோயால் வருந்தினோன் அல்லது அவ்வித நோயால் வருந்துவோனைப் பராமரித்தோன் எவனும், எந்தத் தொழுவத்தையாவது, இடத்தையாவது, ஆசனத்தையாவது, ஓர் பிரசித்த சந்தையில் ஆட்கொள்ளவும், அங்கு எவ்வித ஆகாரங்களையும் விற்பனவுக்கு வைத்திருக்கவும் படாது.

13. ஒரு பிரசித்த சந்தையின், எப்பகுதியையும், உபயோகிக்கும் அல்லது ஆட்கொள்ளு மெவனும் பின்வருவனவற்றைச் செய்யப்படாது. அவையாவன :—

(a) சந்தையில் அல்லது அதற்கருகாமையில் ஒழுங்கீனமாய் நடக்கவும் கலகஞ்செய்யவும் படாது.

(b) சந்தையில் எவ்வித சமையனும் நடத்தப்படாது.

(c) போதிய நியாயமின்றி, கருமங்கள்முடிந்து மாலை ஒன்பது மணிக்குச் சந்தை பூட்டியபின், அவ்வித சந்தையில் நிற்கவும், அல்லது அதன் அருகாண்மையில் வீண்பொழுதுபோக்கவுங் கூடாது.

(d) அவ்வித சந்தையில் அல்லது அதன் அருகாண்மையில் சங்கத்துக்குச்சேர்ந்த கட்டிடங்கள், தொழுவங்கள் லாம்புகள் மற்றெந்தச் சாமான்களையும், அழிக்கவும், வேறெவ்வித பழுதுபண்ணவும் படாது. இன்னும் அவ்வித சந்தையில் பாவிப்புக்காக வைத்திருக்குந் தண்ணீரை அழுக்காக்க அல்லது அசுசிப்படுத்தப்படாது.

14. சங்கத்தின் சோதனைகாரன் (இன்ஸ்பெக்றர்) அல்லது மேல்விசாரணைக்காரன் சுகாதாரசங்க எல்லைக்குட் கொண்டுவரப்பட்ட அல்லது விற்பனவுக்கு வெளியில் வைக்கப்பட்ட, எந்த மாமிசத்தையாவது, பட்சியையாவது, மச்சத்தையாவது, வேட்டை மிருகத்தையாவது; இறைச்சியையாவது, தாவரவஸ்துக்களையாவது, பழங்களையாவது அல்லது வேறெவ்வித சாப்பாட்டுச் சாமானையாவது சுகத்துக்குத் தகாததும், மனிதர் புசிக்கக்கூடாததுமென்று மறியல் செய்தால் அவைகளை அவ்விடத்து வைத்திய உத்தியோகஸ்தருக்கு அல்லது அவர் அங்கிராவிட்டால் அவ்விடமுள்ள நீதிபதிக்கு அல்லது பொலிசுக்கோடு இராவிட்டால், கிராமக்கோட்டு அதிபதிக்குக் கொண்டுபோய் ஒப்புவிப்பது சட்டசம்மதமாயிருக்கும்.

அவ்வித மாமிசமாவது, பட்சியாவது மச்சமாவது, தாவரவஸ்துவாவது, பழமாவது, வேறெந்த ஆகாரமாவது மனுஷர் புசிக்கத் தகாதென்று வைத்திய உத்தியோகஸ்தர் அல்லது நீதிபதி, அல்லது கிராமக்கோட்டு அதிபதி கருதினால் அவர் அவ்வாகாரங்கள் விற்பனவுக்காக வெளியில் வைக்கப்படாவண்ணமும், மனுஷர் அவைகளைப் புசியாவண்ணமும், அவைகளைத் தொலைத்து அல்லது அழித்துப்போடும்படி கட்டளைபண்ண வேண்டியவராவர்.

15. சந்தை எல்லைக்குள்ளே ஒழுக்கங் காப்பாற்றுதல் சந்தைக்காவலனது அல்லது குத்தகைகாரனது கடமையாகும். சங்கத்தினால் சந்தையை மேற்பார்ப்பதற்காகவாவது, வாடகை, கூலிகளைச் சேர்ப்பதற்காகவாவது, ஒழுங்கு அல்லது சுத்தத்தை வற்புறுத்துவதற்காகவாவது நியமிக்கப்பட்டோனை, அவன் தன் கடமைகளைச் செய்யும் வேளைகளில் எவ்விதமாகவாவது தடுப்போன் ஓர் குற்றவாழியாகிறான்.

16. சனங்களின் பாவிப்புக்கு அல்லது சாப்பாட்டுக்கு யாதாமொரு வகையான மீன் விக்கினமானதென்று கண்டால் அல்லது துன்பம் பெருவாரியாய் நடக்கும்போது, ஏதும் பழம் அல்லது தாவரங்கள் சனங்களின் பாவனைக்கு அல்லது சாப்பாட்டுக்கு விக்கினமானதெனக் கண்டால், சங்கத்தின் எல்லைக்குள்ளிருக்கும் சந்தையில் அல்லது வேறிடத்தில் அவ்வித மீன், பழம், அல்லது தாவரவிற்பனவை சங்கம் தேவையென நினைக்குங் காலத்துக்குப் பறையடித்தலால் அல்லது வேறு போதிய அறிவித்தலால் வைத்திய உத்தியோகஸ்தரின் எண்ணப்படி சங்கத்தாரால் நிற்பாட்டுதல் நியாய முறையாகும். அவ்வித அறிவித்தலின் பிற்பாடு மேலே சொல்லப்பட்ட சமான்களை மறியல்செய்யவும், விற்பனவுக்காக வெளியேயிருந்தால் சங்கம் அல்லது சங்கத்தலைவர் கட்டளையிடுவதுபோல அழிக்கவும் நியாயமுண்டு.

17. சாமான்கள் ஏற்ற அல்லது இறக்கத் தேவையான நேரத்துக்கு மேல் கரத்தை அல்லது வண்டி சந்தை யிடங்களில் நிற்கப்படாது.

18. சங்கத்தினால் அதற்கென வைத்திருக்கும் மூடிய ஏதனத்துக்குள் அல்லாமல் பிரசித்த சந்தையின் எப்பாகத்திலாவது குப்பை, கூளம், எலும்பு, மிருகங்களின் தோல் அல்லது ஊர்ச் சௌக்கியத்துககுக் கேடான அல்லது துன்பம் வருத்துவிக்கக்கூடிய எந்த வஸ்துக்களையாவது விடப்படாது.

19. சங்கத்தினால் ஓர் ஆடுமாடறுக்கும் வீடு ஸ்தாபித்திருந்தால் ஓர் மிருகத்தின் பிணமாவது (அல்லது அதன் பகுதியாவது) சங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட பிரசித்த ஆடுமாடறுக்கும் வீட்டில் கொல்லப்படாவிட்டால் பிரசித்த அல்லது பிரசித்தமில்லாத சந்தைக்குள் கொண்டுவரவும், விற்கவும், விற்பனவுக்காக வெளியேவைக்கவும் படாது. இந்த இலங்கைத்தீவுக்கு இறக்குமதியாகவரும் ஐஸ்போட்ட இறைச்சியை, வேட்டை இறைச்சியை அல்லது மீனை இத்துணைப் பிரமாணங் கருதாது.

B.—பொதுப்பிரமாணங்கள்.

(a) சுகாதார சங்கத்தலைவரிடமிருந்து வருஷாந்த உத்தரவுப்பத்திரமில்லாமல் யாதொருவரும் சுகாதாரசங்க எல்லைக்குள் அப்பப் போறணையை, சாப்பாட்டுக்கடையை, தேய்த்தண்ணீர் அல்லது கோப்பிக்கடையை அல்லது மாட்டுக்காலையை வைத்திருக்கப்படாது. இதன்பின் காணும் எந்த ஒழுங்குக்கும் அமையத் தவறும் எவனுக்கும், சங்கத்தலைவர் மேற்சொல்லிய உத்தரவுப்பத்திரத்தைக் கொடுக்க மறுதலிக்கத் தத்துவம் உண்டு. அவ்வித உத்தரவுப்பத்திரம் கொடுத்த வருஷத்தின் மார்கழிமாசம் 31 ந் தேதிவரையும் அல்லது அந்த உத்தரவுப்பத்திரம் அழிக்கப்படும்வரையும் பெறும்.

ஆலோசனைச் சபையில் தேசாதிபதியின் அனுமதியோடு சுகாதார சங்கம் காலத்துக்குக்காலம் இவ்வித உத்தரவுப் பத்திரங்களுக்குச் சலார் விதிக்கலாம்.

(b) பின்வரும் ஒழுங்குகளில் எதையேனும் மீறியதற்காய் எந்தக் கோட்டினாலேனும் இருமுறை அல்லது அதற்கு மேற்பட ஒருவன் குற்றவாளியாகக் காணப்பட்டால், அவ்வித இரண்டாங் குற்றத்தை அல்லது கூடிய குற்றத்தை எழுதுங் கோட்டாருக்கு அப்படிப்பட்டவனுக்கு இந்த அதிகாரத்தின்கீழ் சுகாதாரசங்கத்தலைவரால் கொடுக்கப்பட்ட உத்தரவுப் பத்திரத்தை யழிக்கத் தத்துவமுண்டு. இவ்விதமே ஒரு கோட்டாரால் ஓர் உத்தரவுப்பத்திரம் அழிக்கப்பட்டபின் சுகாதார சங்கத்தலைவர் தமது எண்ணப்படி ஒரு புது உத்தரவுப்பத்திரத்தை அவனுக்குக் கொடுக்க மறுதலிக்கவுந் தத்துவமுண்டு. ஆனால் இந்த ஒழுங்குகள் பிரசித்த சங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட அல்லது அதில் நிற்பாட்டப்பட்ட சந்தைகளிலிருக்குந் தொழுவங்களுக்குப் பொருந்தாது.

C.—அப்பப்போறணைகள்.

1. மனுஷர் சாப்படுவதற்கு கோதுமை யப்பம், விஸ்கோத்து, இனிப்புப்பண்டங்கள் செய்யப்படும் இடத்தை பேக்கறி என்னுஞ் சொல்லுக் கருதும். அவ்வித சாப்பாடு சுடுவதற்கு ஆயத்தப்படுத்தப்படு மிடத்தையும், அவ்வித சாப்பாடுகள் செய்வதற்கான பொருட்கள் வைக்கப்படு மிடத்தையுங் கருதும்.

2. ஒவ்வொரு பேக்கறியும் நல்லாய்க் காற்று வரக்கூடியதாயும் வெளிச்சம் வரக்கூடியதாயு மிருத்[தல்] சுவர்கள் சுண்ணும்புச் சேர்வைபூசி வெள்ளையடிக்கப்படல் வேண்டும். நிலம் சீமேந்து போடப்பட்டு தேவை[யான] கான்கள் விடப்பட்டிருத்தல்வேண்டும்.

3. மாப்பிசைகிறதற்கும், அப்பஞ் சரிக்கட்டுவதற்கும், பாவிக்கப்படும் அண்டாக்களும், மற்றுஞ் சாமா[ன்களும்] நல்ல துப்புரவாய் வைத்திருத்தல் வேண்டும். நிலம் துப்புரவு பண்ணுவதற்காக அவைகள் தூக்கிக்கொண்டு [போகக்] கூடியவைகளாகவு மிருத்தல் வேண்டும்.

4. யாதொரு பேக்கறி, சாப்பாட்டுவீடு, தேய்த்தண்ணீர் அல்லது கோப்பிக்கடை ஒரு குளிக்கக்கூசு, பசளைக்கு[ழி]ம், திறந்த கான், அல்லது கக்கூசிலிருந்து, முப்பது அடிக்குள் இருக்கப்படாது.

5. ஒவ்வொரு பேக்கறியும் துப்புரவாய் வைக்கப்படல் வேண்டும். யாதொரு கான், கக்கூசு, குளிக்கக்கூசு அல்லது சுகத்துக்கு இடையூறுன வேறிடத்தில் இருந்து எழும்பும் நச்சுக்காற்று வாராதபடி ஒவ்வொரு பேககறியு மிருத்தல் வேண்டும்.

6. ஒரு பேக்கறி, சாப்பாட்டுவீடு, தேய்த்தண்ணீர் அல்லது கோப்பிக்கடை, இவைகளை அல்லது இவைகளைச் சுற்றியுள்ள இடங்களிலுள்ள எல்லாக் குப்பைகளும் ஊத்தைகளும் தாமசமின்றி அகற்றப்பட்டு கான்கள் நன்றாய்க் கழுவப்பட்டிருக்கவும் வேண்டும்.

7. பேக்கறியாகப் பாவிக்கப்படும் எந்த இடமும் குடியிருக்கு மிடமாக அல்லது வேறெந்தப் பாவிப்புக்கும் உபயோகிக்கப்படாது.

8. சங்கத்தின் அங்கத்தவர் எவரும் அல்லது சங்கத்தலைவரினால் எழுத்தில் அதிகாரங்கொடுக்கப்பட்ட எவரும் எந்நேரத்திலும் எந்தப் பேக்கறி, சாப்பாட்டுவீடு, தேய்த்தண்ணீர் அல்லது சோப்பிக்கடைக்குள் போகவும் அதைச் சோதனைபண்ணவும் நியாயமாகும் ஆனால் அந்நேரத்தில் அங்கே யொருவர் பொறுப்பாயிருந்தாலொழிய அப்படிச்செய்யலாம்.

9. எவ்வித நியாயத்தினாலேனும் யாதொரு மிருகமும் பேக்கறியில் வைத்திருககப்படாது.

10. தொற்றுவியாதியுள்ளவனை அல்லது பேக்கறியின் முதலாளி அறியக்கூடியதாய்க் கொஞ்சக்காலத்துக்குமுன் அவ்வித வியாதியுள்ளவனுயிருந்தவனை அல்லது அவ்வித வியாதியுள்ளவனைக் கொஞ்சககாலத்தின்முன் பராமரித்தவனை பேக்கறிககுள் போகிறதறகு அல்லது அப்பம், விஸ்கோத்து, இனிப்புப்பண்டங்கள் சரிக்கட்டுவதறகு அல்லது விறபனவு செய்தற்கு பேக்கறியின் முதலாளி எடுக்கப்படாது.

11. ஒவ்வொரு பேக்கறியிலும் முக்கியமான இடத்தில் இந்தப் பிரமாணஙகளின் கொப்பியொன்று மட்டைபோடப்பட்டுத் தூக்கியிருத்தல் வேண்டும்.

D.—சாப்பாட்டுவீடுகளும், தேய்த்தண்ணீர் கோப்பிக்கடைகளும்.

1. சங்கத்தலைவர் திருப்திக்கு எல்லாச் சாப்பாட்டுக்கடைகளும், தேய்த்தண்ணீர் கோப்பிக்கடைகளும் துப்புரவாயும் சுகத்துக்கு ஏற்றவிதமாயும் வைத்திருக்கப்படல் வேண்டும்.

2. எந்தச் சாப்பாட்டுக்கடையிலும் அல்லது தேய்த்தண்ணீர் கோப்பிக்கடையிலும், பாவிக்கப்படும் அல்லது அதற்குச்சேர்ந்த எல்லாப் பாத்திரங்களும், மேசை கதிரைகளும், மற்றுந் தேவையான சாமான்களும் எப்பொழுதுந் துப்புரவாய் வைத்திருக்கப்படல் வேண்டும்.

3. சாப்பாட்டுக் கடைகளினதும், தேய்த்தண்ணீர் கோப்பிக் கடைகளினதும், சுவர்கள் சுண்ணும்பு பூசப்பட்டு வெள்ளையடிக்கப்பட்டிருக்க வேண்டும். அங்கிருக்கு மறைகள் நல்லாய்க் காற்றும் வெளிச்சமும் உட்செல்லக்கூடியனவா யிருக்கவேண்டும்.

4. தொற்றுவியாதியுள்ளவனை அல்லது சாப்பாட்டுக்கடையின் அல்லது தேய்த்தண்ணீர் கோப்பிக்கடையின் முதலாளி அறியக்கூடியதாய்க் கொஞ்சக்காலத்தின்முன் அவ்வித் வியாதியுள்ளவனுயிருந்தவனை அல்லது அவ்வித வியாதியாயிருந்த ஒருவனைப் பராமரித்தவனை சாப்பாட்டுக்கடை அல்லது தேய்த்தண்ணீர் கோப்பிக்கடையின் முதலாளி அந்தக் கடையில் அல்லது அதற்குக்கிட்ட வேலைபார்ப்பதற்கு எடுக்கப்படாது.

E.—காலைகள்.

1 ஒவ்வொரு உத்தரவுபண்ணப்பட்ட காலையும், சங்கத்தலைவரால் பதியப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு காலையின் வாசலிலும், லைசென்ஸ் எடுத்த ஆளால் பதியப்பட்ட காலை இலக்கம் என்ற சொற்களும், சொந்தக்காரனுடைய பெயரும், பூச்சுமையால் எழுதப்பட்ட விளம்பரப்பலகை தூக்கியிருத்தல் வேண்டும்.

2. ஒவ்வொரு காலையும் அல்லது வண்டில்கள் மாடுகள் வந்து தரிக்கும் இடமும், சங்கத்தலைவர் திருத்திப்படக்கூடிய மாதிரியாய் மட்டம்பண்ணிக் கான் கூட்டியிருக்கவேண்டும். கடுமையானவும் மட்டமாயுமுள்ள மேற்பரப்பு இருக்கக்கூடிய மாதிரியாய், நிலம் தளிவிசைபதித்திருக்கவேண்டும் அல்லது உடைத்த கல்லால் நல்லாய்ப் பதித்திருக்க வேண்டும். அவ்வித காலையை அல்லது தங்குமிடத்தை துப்புரவாயும் சுகத்துக்குரிய மாதிரியாகவும் வைத்திருத்தல் வேண்டும். அதை ஒவ்வொரு நாளும் நல்லாய்க் கழுவி எல்லாச் சாணியையும், அழுக்கையும் குடியிருக்கும் வீடுகளுக்கு எட்டவுள்ள சங்கத்தலைவரின் அநுமதிபெற்ற விடத்தில் ஒவ்வொரு நாளுங் கொண்டுபோய்க் கொட்டவேண்டும் மேற்சொல்லியபடி ஒவ்வொரு நாளுந் துப்புரவுபண்ணுவதற்கு இடைஞ்சலாயிருக்கக்கூடிய மாதிரியாய் ஒரு சாமானும் அவ்வித காலையில் வைக்கப்படாது.

3. ஒவ்வொரு குதிரைமாலும், மாட்டுக்கொட்டிலும் அல்லது ஆடுமாடு தரிக்கும் இடமும் துப்புரவாயும் சுகத்துக்குரியவிதமாயும் வைத்திருக்கப்படல் வேண்டும், அவைகள் ஒவ்வொரு நாளும் துப்புரவுபண்ணப்பட்டு குடியிருக்கும் வீட்டுக்குத் தூரத்திலுள்ள சங்கத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு இடததில் ஒவ்வொரு நாளும் சாணியும், கஞ்சலும் அள்ளிக்கொண்டுபோய்க் கொட்டப்படல் வேண்டும்.

4 சங்கத்தின் உத்தியோகஸ்தர்களால் அல்லது சங்கத்தலைவரால் எழுத்தில் அதிகாரங்கொடுக்கப்பட்ட வேறு ஆளால் நியாயமான நேரங்களிலே சோதிக்கப்படுவதற்கு ஒவ்வொரு காலையும் ஏதுவாயிருக்கும். இந்தப் பிரமாணங்களின் தத்துவத்தால் சங்கத்தலைவன் செய்யுங் கட்டளைகள் எல்லாம் எழுத்திலிருக்கவேண்டும்.

5 ம் அதிகாரம்.—(9 ம் பிரிவு (2) (*f*)).

விக்கினமானதும் அருவருக்கப்படக்கூடியதுமான தொழில்கள்.

1. இக்கட்டளைச்சட்டத்தின் முகாந்தரத்துக்காகப் பின்வருகிற தெல்லாம், விக்கினமானதும், அருவருக்கப்படக்கூடியதுமான தொழில்களென்று கருதப்படும்.

செயற்கையான பசளை சேகரித்தல் அல்லது செய்தல், இரத்தம் அல்லது எச்சில் அவித்தல், இரத்தத்தை அல்லது எச்சிலை உலர்த்தல், தோல் பதனிடுதல், கொழுப்புருக்குதல், கொழுப்பு வடித்தல், சவர்க்காரம் செய்தல், தென்னைமட்டை ஊறவைத்தல் தும்புக்குச் சாயம் தோய்த்தல், இயந்திரத்தால் தேங்காயெண்ணெய் வடித்தல், தும்பு சேகரித்தல், அல்லது ஆக்குதல் தோல், எலும்பு, செயற்கையான பசளை அல்லது செயற்கையான பசளை ஆக்குவதற்கு வேண்டிய பொருட்கள் சேகரித்தல் ஐந்து அந்தர் நிறைக்கு மேற்பட்ட மீன், கருவாடு சேகரித்து வைத்தல், கருங்கல், கபூக் என்னுங் கூளாங்கல் கிறவல் என்னும் போளாங்கல் எடுப்பதற்கு நிலங் கிண்டுதல், செங்கல்லு ஓடு செய்தல், சுண்ணும்பு நீறறுதல், சோடா, லெமினற் செய்தல் மின்னரம் நீற்றல் அல்லது சேகரித்து வைத்தல்.

2. சுகாதாரசங்கத்தின் எல்லைக்குள்ளேயுள்ள எந்த நிலத்தை அல்லது வளவையுடையோன் அல்லது ஆட்சிசெய்வோன் அவ்வளவில் அல்லது நிலத்தில் விக்கினமான அல்லது அருவருப்புடையதான எநத வியாபாரத்தையும், அல்லது

...யும் சுகாதாரசங்கத் தலைவரின் உத்தரவின்றி நடாத்தவும், நடாத்த விடவுங்கூடாது. மேலும் இதற் ...ல்து முன் நிரூபிக்கப்பட்ட சுகாதாரசங்கத்தின் எக்கட்டளைகளுக்காவது உடன்படாத ஒருவனுக்கு அவ்வித ...சக் கொடாது விடுதற்குச் சுகாதாரசங்கத் தலைவருக்குத் தத்துவமுண்டு. தேசாதிபதியினதும், சங்கத்தினதும் ...திப்படி காலத்துக்குக்காலம் சுகாதாரசங்கம் விதிக்கும் சலார்கள் அவ்வித லைசன்ஸ் பெறுவதற்குக் கட்டப்பட ...டும்.

3. இக்கட்டளைச்சட்டங்...ில் யாதொன்றையாவது மீறியதற்காக இரண்டு அல்லது பல முறைகளிலே ஒருவன் குற்றவாளியென்று கோட்டாரால் தீர்க்கப்பட்டால் அந்த இரண்டாவது அல்லது அதன்பின் நிரூபிக்கப்படுங் குற்றத்தின் பேரில் தீர்ப்பெழுதுங் கோட்டார் இவ்வதிகாரத்தின்கீழ் சுகாதாரசங்கத் தலைவரால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட லைசென்சை அழிப்பது நியாயமுறையாகும். ஒரு கோட்டால் ஒரு லைசென்ஸ் அழிக்கப்பட்டபின் அவ்வித ஒருவனுக்கு ஓர் புது லைசென்சைக் கொடாது அதாவது தான் எண்ணியபடி கொடாது விடுதற்குச் சுகாதாரசங்கத் தலைவருக்குத் தத்துவமுண்டு.

4. மேற்கூறிய வியாபாரங்கள், முயற்சிகள், கைத்தொழில்களை நடாத்துவதற்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் அவைகளிடமிருந்து பரமாணு புறப்படாமலும், தொந்தரவுக்குக் காரணமாயிராமலும், தக்க விதமாய்ச் சேர்த்து வைக்கப்படவேண்டும். பரமாணு புறப்படக்கூடியவும், அருவருப்புக்குக் காரணமாயிருக்கப்படக்கூடியதுமான, யாதோர் அதிக போக்குவரவான வழியால் கொண்டுவரவேண்டியதாயிருந்தால், அவைகளெல்லாம் உறிஞ்சக்கூடாத மூடப்பட்ட கொள்கலங்களில் அல்லது எவருக்கும் யாதோர் வசதியீனமுண்டாகாவண்ணம் சங்கத்தலைவர் குறிக்கும் மாதிரியாகக் கொண்டு போகப்பட வேண்டும்.

5. இவைகள் செய்யப்படும்பொழுது வெளிவரும் அருவருப்புள்ள வாயு அல்லது ஆவி, மோசமற்றவையாயிருக்கும்வண்ணம் சித்தியாக்கூடிய எத்தனங்கள் செய்யப்பட வேண்டும். அவ்வித வாயு அல்லது ஆவிகள், ஒன்றில் வெளியிற் போய்க் கெடுதி அல்லது சேதம் விளைவிக்காமல், வேண்டிய உயரத்திலும், தக்க மாதிரியாகவும், வெளிக்காற்றிலே தள்ளப்பட வேண்டும். அல்லது நேரே நெருப்புக்கூட்டாய் அல்லது ஒரு ஒடுக்குங் கருவிக்குள்ளே போக்கப்பட வேண்டும். எல்லா வளவுகளிலேயும், வேண்டிய கான்கள் இருக்க வேண்டும். அக்கான்கள் ஒழுங்காக வைத்திருக்கப்படவும் தினமுங் கழுவப்படவும் வேண்டும்.

6. தரைகள் உடைவு பழுதில்லாமல், காப்பாற்றப்படல் வேண்டும். அவைகள் தினமுந் துப்புரவுசெய்யப்படல் வேண்டும் சங்கத்தலைவர் கட்டளைப்படியும், அவர் குறிக்கும் சுவறக்கூடாத வஸ்துவினாலும் அத்தரைகள் கட்டப்பட வேண்டும்.

7. அழுக்கை உறிஞ்சாவண்ணம், சுவர்களெல்லாம் ஒழுங்காக வைத்திருக்கப்படல் வேண்டும். அவைகள் வருஷத்துக்கு இரு முறை, அல்லது சுகாதாரசங்கத் தலைவர் அல்லது முதற் சுகாதார உத்தியோகஸ்தர் கட்டளையிட்டால் அடிக்கடி வெள்ளையடிக்கப்படல் வேண்டும்.

8. ஆயுதங்கள், பாத்திரங்களடங்கிய கருவிகளெல்லாம் துப்புரவாக வைத்திருக்கப்படல் வேண்டும். கூடுமானால் தினமும் சுத்திபண்ணப்படல் வேண்டும். கழிவு, குப்பை, சீவுத்துண்டுகள், அழிவுசாயத்தோலினுண்டான பொருட்கள் வளவிலேயே வேறு வியாபார முயற்சிக்கு உடனே உபயோகிக்கப்பட்டாற்சரி, அல்லாவிடில் ஒவ்வொரு நாளும் வளவிலிருந்து நீக்கப்படல் வேண்டும்.

9. தோல் அல்லது வேறு வஸ்துக்கள், கழுவுதற்கு, அல்லது நனைய வைப்பதற்கு உபயோகிக்கப்படும் வக்குகள் பரமாணுபுறப்படாவண்ணம் வேண்டிய நேரமெல்லாம் வெறுமையாக்கவும், துப்புரவுபண்ணவும்பட வேண்டும்.

10. எந்த அருவருப்பான முயற்சியை அல்லது கைத்தொழிலையாவது நடாத்துவோன் அல்லது அவ்வித அருவருப்பான முயற்சி அல்லது கைத்தொழில் செய்யப்படும் நிலத்தை அல்லது வளவையுடையோன், அல்லது ஆட்சிசெய்வோன் யாதோர் அழுக்கான, துர்நாற்றமுள்ள, அருவருப்பான நீரை அல்லது வேறுசலத்தை, அதனுட் செலுத்துதலால் அல்லது ஓடவிடுதலால், அல்லது அங்கே யாதோர் அருவருப்பான வஸ்துவைக் கழுவ விடுதலால் அல்லது வேறென்ன விதமாகவாவது, ஓர் ஆற்றையாவது, நீரோட்டத்தையாவது வெட்டாற்றையாவது, வாய்க்காலையாவது, கிணற்றையாவது குளத்தையாவது, தடிகத்தையாவது அசுசிப்படுத்தப்படாது.

11. மேற்சொல்லிய தொழில்கள் நடத்தும் வளவுகள் சுகாதாரசங்கத் தலைவரால், அல்லது அவரால் தத்துவமழிக்கப்பட்ட வேறு யாராவது சோதிக்கப்படுவதற்கு ஒப்பத்தக்க வேளைகளில் திறபட்டிருத்தல் வேண்டும்.

12. செங்கல்லு, ஓடு, கட்டிடவேலை, அல்லது வேறென்ன முகாந்தரத்திற்காவது களிமண், மண், கல்லு, கிறவல், கபூக் அல்லது வேறென்ன வஸ்துவையாவது கிண்டியெடுக்கப்படும் நிலத்தையுடையோன், அல்லது ஆட்சிசெய்வோன், அங்கே தோண்டிய கான்களுண்டோவென்றும், அந்தக் குளிகளுள்ளும், அகள்களுள்ளும் தண்ணீர் நில்லாவண்ணம் மூடப்பட்டிருக்கிறதோ வென்றும் பார்க்க வேண்டும்.

13. சுகாதார சங்கத்தினால் நியமிக்கப்பட்ட இடம் அல்லது இடங்களில் அன்றி யாதொருவனும் வேறிடங்களில் மீன் பரவவும் காயப்போடப்படவுங் கூடாது.

### 6 ம் அதிகாரம்.—(9 ம் பிரிவு E (2) (i)).

*அரசாட்சியாருக்குச் சேர்ந்த பண் செய்யப்படாத அல்லது பகிரங்க நிலங்களைப் பாதுகாத்தல்.*

1. சங்கத் தலைவரின் தத்துவமின்றி அரசாட்சியாருக்குச் சேர்ந்த பாழ்நிலங்களில் அல்லது பொது நிலங்களிலேயிருந்து, யாதொருவனும், ஏதும் மண், கல், வளருஞ் செடி அல்லது மரத்தைக் கொண்டுபோகக் கூடாது. மேலும், அவ்வித நிலங்களை எவ்விதமாகவும் மாற்றவும் அவலட்சணமாக்கவும்படாது.

### 7 ம் அதிகாரம்.—(9 ம் பிரிவு E (2) (j)).

*எல்லை நாட்டல், எல்லைகளைப் பாதுகாத்தல்.*

1. சங்கத்தலைவருக்கு இருபத்தொரு நாட்களுக்கு முன் எழுத்துமூலமாகச் செய்ய எண்ணும் வேலையை, காற்றுப் போக்குவரவு கான், சுகாதாரத்துக்காகச் செய்யப்பட்ட ஒழுங்குகளை காட்டப் போதிய படங்கள், அணைத்து அறிவித்தல் பத்திரம் கொடுக்காமல் நிலையாயுள்ள கட்டிடத்தையேனும், அல்லது அப்போதைக்குள்ள பாவிப்புக்காகிய கட்டிடத்தையேனும், கட்டுதல், திருப்பிக் கட்டுதல், பழுதுபார்த்தல், கூட்டிக் கட்டுதல், அல்லது பெருப்பித்துக் கட்டுதலும் அப்படிப்பட்ட கட்டிடத்தின் முகப்பை எவ்விதமாயேனும், புதுப்பித்தல், பழுதுபார்த்தல், மாற்றுதல் அல்லது கூட்டுதலும், அல்லது வாய்க்கால், பாலங் கட்டுதலும், வாய்க்காலின்மேல் பலகை முதலியன அடித்தலும், அல்லது கக்கூஸ் ஊத்தைக் கிடங்கு கட்டுதலும், யார் செய்தாலும் அச்செய்கை கட்டளைச்சட்டத்திற்கு மாறென்று கொள்ளப்படும். அப்படிப்பட்ட கட்டு வேலையைச் சங்கத் தலைவரிலிருந்து எழுத்து மூலமாய் உத்தரவு கிடைக்குமுன் அல்லது இருபத்தொரு நாட்களுக்குமுன் கொடுத்த அறிவித்தலின் காலம் முடியுமுன் தொடங்கப்படாது.

2. பட்டினத்துக்குள்ளிருக்கும் எந்த வீட்டினதும், தோட்டத்தினதும், கட்டிடத்தினதும் அல்லது காணியினதும் சொந்தக்காரன் அல்லது ஆட்சிசெய்வோன் அவ்வித வளவு, தோட்டம், கட்டிடம் அல்லது காணியைச் சுற்றித் தரை மட்டத்திலிருந்து நாலு அடிக்குக் குறையாத உயரமுள்ள சுவர் அல்லது நல்ல வேலி போட்டிருத்தல் வேண்டும்.

3. சுகாதார சங்கத் தலைவர் தாமாகப் பார்வையிட்டபின் அல்லது தாம் அதிகாரங் கொடுத்த ஒ
டபின், யாதொரு பட்டின எல்லைக்குள்ளிருக்கும் ஒரு மரம் அல்லது அதன் கொப்பு, அல்லது பழம், யா
லது கட்டிடத்தின் மேல் விழுந்து அங்குள்ளவர்களுக்குக் கேடு விளைவிக்குமெனக் கண்டால், அல்லது மேற
கள் ஒரு தெருவுக்குமேல் சாய்ந்து நிற்குமானால் அவ்வித மரம் நிற்கும் காணியின் சொந்தக்காரனுக்கு அல்
செய்வோனுக்கு அவ்வித மரத்தை அல்லது கொப்பை அல்லது பழத்தை வெட்டிவிடும்படி அல்லது பிடுங்கி
எழுத்தில் அறிவித்தல் கொடுக்க அதிகாரமுண்டு. ஆனால் அவ்வித சொந்தக்காரன் அல்லது ஆட்சிசெய்வோன் அ
அறிவித்தல் கொடுபட்டு இருபத்துநாலு மணித்தியாலங்களுக்குள் அவைகளை வெட்டி அல்லது பிடுங்கி விடாவிட்
சுகாதார சங்கத் தலைவர் அல்லது அவரால் எழுத்தி லதிகாரங் கொடுக்கப்பட்டவர் எவரும், தேவைப்பட்ட வேலையா
ளுடன் அக்காணிக்குள்ளே போய் அவ்வேலையைச் செய்யவும் செய்விக்கவுந் தத்துவமுண்டு. இவ்வேலையைச் செய்
னால் வந்த செலவைக் காணியின் சொந்தக்காரன் அல்லது ஆட்சிசெய்வோன் கொடுக்க வேண்டும். அச்செலவு சொந்த
காரனால் சங்கத்துக்குக் கொடுபடவேண்டிய ஒரு கடனாகப் பாவிக்கப்பட்டு அறவாக்கப்படும்.

8 ம் அதிகாரம். (9 ம் பிரிவு E (2) ($m$)). நாய்கள்:

1. காலிகளாய்த் திரியும் நாய்களெல்லாம், பிடிபட்டு வருத்தமுடையன, அல்லது வருத்தமுடையனவெனச் சமுசயப்பட்டால், கொல்லப்படும். அல்லாவிடில் சங்கத்தாரா லமைக்கப்பட்ட சாலையில் அடைக்கப்படும். நாயின் சொந்தக்காரன் தன்னுடையதென்று கேட்டு மீட்டுக்கொண்டுபோக விரும்பினால், சுகாதார சங்கத்தார் பட்ட செலவுக்ளுக்காக, ஒவ்வொரு நாய்க்கும், மறியற்படுத்தப்பட்ட முதல் நாளுக்கு நாற்பது சதமும், அடுத்த ஒவ்வொரு நாளுக்கும் பதினைந்து சதவீதமும் அறவாக்கபபடும். அடைக்கப்பட்டிருக்கும் நாய்கள் மூன்று நாட்களுக்குள் உரித்துப்பேசுவோரில்லாவிடில் கொல்லப்படும்.

9 ம் அதிகாரம். (9 ம் பிரிவு E (2) ($o$)).

கட்டப்படவிருக்கும் வீடுகளின் அளவு பிரமாணங்களை ஒழுங்குபடுத்தல்.

1. பின்வரும் நிபந்தனைகளைத் தவிர, வேறெவ்விதமாயாவது ஒரு பட்டின எல்லைக்குள், குடியிருப்பதற்காய் யாதொரு வீட்டை அல்லது குடிசையைக் கட்டல் அல்லது அவ்வித வீட்டில் அல்லது குடிசையில் குடியிருக்க விடுதல் நியாயமுறையாகாது.

(a) மனுஷ வாசத்துக்காகப் பாவிக்கப்படும் ஒவ்வொரு அவ்வித வீடும், அல்லது குடிசை, அல்லது அறையும் 120 அடிக்குக் குறையாத விசாலமும், 10 அடிக்குக் குறையாத உயரமும் உள்ளதாயிருக்க வேண்டும். அதன் தாழ்வாரங்கள் நிலத்திலிருந்து குறைந்தபட்சம் ஆறு அடி யிருக்க வேண்டும்.

(b) மனுஷ வாசத்துக்காகப் பாவிக்கப்படும் ஒவ்வொரு அறையும், குறைந்தபட்சம் ஆறடி உயரத்துக்கும், மூன்றடி அகலத்துக்குங் குறையாத ஒரு கதவும், மூன்றடி உயரத்துக்கும், இரண்டடி அகலத்துக்குங் குறையாத ஒரு யன்னலுமுடையதாயிருக்க வேண்டும்.

(c) யாதொரு வீடு, அல்லது குடிசை, ஒரு தெருவுக்கு, முகப்பு உடையதாயிருக்குமானால், அவ்வித விட்டின் அல்லது குடிசையின் நிலம்பட்டம், அந்தத்தெருவின் மட்டத்துக்கு குறைந்தபட்சம் ஒரு அடிக்கு மேற்பட்டதாயிருக்க வேண்டும். மேலும் அந்த வீடு, அல்லது குடிசை, அவ்வித தெருவிலிருந்து குறைந்த பட்சம் நாலு அடிக்கப்பால் இருக்க வேண்டும்.

10 ம் அதிகாரம். (9 ம் பிரிவு E (2) ($r$)).

1. வளவுகளில் அல்லது குடியிருக்கும் வீடுகளுக்குக்கிட்டவாகஉள்ள பதிவான நிலங்கள் நிறவப்படல் வேண்டும் அல்லது அவைகளில் தண்ணீர் நில்லாவண்ணம் வாய்க்கால் வெட்டிப்பாச்சிவிடவும் வேண்டும். மேற்சொல்லிய வளவுகளிலே பரவிக் கிடக்கும் தண்ணீர் கொண்டு நிற்கக்கூடிய அவசியமற்றபாத்திரங்களும், எவ்வித பாண்டங்களும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும்.

2. சங்கத்தலைவரிடமிருந்து, எழுத்திலே உத்தரவுபெறாமலன்றி யாதொரு பட்டின எல்லைக்குள் தண்ணீர்நிற்கத் தக்க விதமாய் ஒரு காணியிலிருந்து மண்தோண்டியெடுத்தலும் யாதொரு பட்டினத்துள் பள்ளங்கள் குழிகள் தோண்டுதலும் நியாயமாகாது.

11 ம் அதிகாரம். (9 ம் பிரிவு E (2) ($t$)).

துப்புரவைப்பற்றிய பொதுப்பிரமாணங்கள்.

1. சுகாதார சங்க எல்லைக்குட்பட விருக்கும், காணிகளின் சொந்தக்காரர், குத்தகைகாரர் ஆட்சிபண்ணுவோர் ஆகிய யாவரும், அக்காணிகளைச் சுத்தமாகவும், களைப்புற்கள் இல்லாமலும், சுகக்கேடான பூண்டுகளில்லாமலும், குப்பை, கஞ்சல், இல்லாமலும் வைத்திருக்க வேண்டும்.

2. தனது வளவிலிருந்து சாம்பல், கூட்டிய குப்பை, கூளம் அல்லது வேறு அழுக்குகளைச் சங்கத்துக் குப்பை கூட்டிகளைக்கொண்டு, அப்புறப்படுத்த விரும்பும் எவனும் அவ்வித குப்பை, கூளங்களைச் சங்கத்தார் சொல்லும்வண்ணம் மூடிய வாளிகள், பெட்டிகள் அல்லது வேறு பாண்டங்களில் போட்டு சங்கத்தார் காலத்துக்குக்காலம் பிரசித்தம்பண்ணும் அறிவித்தலில் சொல்லிய மணித்தியாலங்களில் நாளாந்தம் தங்கள் வளவுகளுக்கு வெளியே தெருவோரத்தில்வைக்க வேண்டும். குப்பை கூட்டிகள் அவ்வித வாளிகள், பெட்டிகள், வேறு பாண்டங்களிலுள்ள அழுக்குகளை எடுத்து அரை மணித்தியாலத்துள், அந்த வாளிகள், பெட்டிகள் அல்லது பாண்டங்களை எடுத்துப்போடவேண்டும். மேற்சொல்லிய விதமாயன்றி வேறு பிரசித்த குப்பை வக்குகள் வைக்கப்பட்டிருந்தால், அவைகளிலல்லாது, யாதொருவனும், சாம்பல், கூட்டிய குப்பை, கூளம், அல்லது வேறு அழுக்குகளை யாதொரு தெருவிலாவது, பிரசித்த இடத்திலாவது போடப்படாது.

3. சுகாதார சங்க எல்லைக்குட்படவிருக்கும், எந்தவீடு, கட்டிடம், அடைப்பு அல்லது வளவின் சொந்தக்காரன் அல்லது ஆட்சிபண்ணுவோனை அவ்வித வீடு, கட்டிடம் அடைப்பு அல்லது வளவிலிருக்கும் அல்லது அவைக்குச்சேர்ந்ததாயிருக்கும் குளிக் கக்கூசு: கக்கூசு அல்லது வாளிக கக்கூசிலிருக்கும் சாமான்களை அவரால் எழுத்திற் கொடுக்கப்படும் அறிவித்தலிற் கொடுக்கப்பட்ட நேரத்திலும், இடம் அல்லது இடங்களுக்குங்கொண்டுபோக அல்லது கொண்டுபோகப் பண்ண எந்த நேரத்திலும் கட்டளைபண்ணச்சங்கத்தலைவருக் கதிகாரமுண்டு. அவ்வித அறிவித்தல் கொடுத்து ஏழு நாட்களுள் அந்த அறிவித்தலிற் கேட்ட பிரகாரம் அவ்வித சொந்தக்காரன் அல்லது ஆட்சிசெய்வோன் செய்யத்தவறினால், சங்கத்தலைவர் அவ்வித வேலையைத் தாமே செய்விக்கலாம். அதற்காக அவ்வித வீடு, புறவீடு, கட்டிடம், அடைப்பு, அல்லது வளவுக்குள் தேவையான வேலையாட்களோடும், ஆயுதங்கள், சாமான்களோடும் புகுவதற்குச் சங்கத்தலைவருக்குத் தத்துவமுண்டு. இதற்கான செலவு சொந்தக்காரனால் சங்கத்துக்குக் கொடுபட வேண்டிய கடனாகக் கவனிக்கப்பட்டு அறவிடப்படும்.

4. யாதொரு மாடு, குதிரை, செம்மறியாடு, வெள்ளாடு, அல்லது பன்றி ஒரு வீட்டில் அல்லது வளவில் செத்தால் அது செத்து நாலு மணித்தியாலத்துள் அல்லது இரவிற் செத்தால் விடிந்து நாலு மணித்தியாலத்துள், சங்கத்தலைவரி

...நியமித்திருக்கும் இடத்துக்கு அந்த வளவின் சொந்தக்காரன் அல்லது குடியிருப்பவன் தன் செல...தப் பிணத்தைக் கொண்டுபோய்ப் புதைக்க வேண்டும் அல்லது சங்கத்தின் மேல்விசாரணை உத்தியோ... அல்லது ஆராச்சிசெய்யும் உத்தியோகஸ்தனுக்கு அது செத்துக்கிடக்குஞ் சங்கதியை அறிவிக்க வேண்...டி அறிவித்தால் பிணத்தைக் கொண்டுபோய்ப் புதைக்குங் கூலியைச் சங்கத் தலைவர் நியமிக்கிறபடி அவன் ...கவேண்டும்.

5. சங்கத்தின் எல்லைக்குள்ளேயுள்ள எந்தக் கட்டிடத்திற்குள்ளும், வளவுக்குள்ளும், காலை ஏழு மணிக்கும், பின்னரம் ஐந்து மணிக்குமிடையிற் போகவும், அவ்வித கட்டிடங்களும், வளவுகளும், சுகதுக்கேற்றவைகளாய் வைக்கப்பட்டிருக்கின்றனவோ வென்று அறிவதற்கும், வேண்டியவைகளைச் செய்வதற்கும் ஆராச்சிசெய்யும் உத்தியோகஸ்தருக்...ம், (இன்ஸ்பெக்றர்) சங்கத்தலைவரால் எழுத்தில் அதிகாரங் கொடுக்கப்பட்ட எவருக்கும் தத்துவமுண்டு.

6. யாதும் ஊத்தை, பசளை, கஞ்சல், கூட்டிய குப்பை, அல்லது எவ்வித அழுக்கையேனும், அல்லது மழைய போத்தல்கள், தகரங்கள், சட்டிகள், சிரட்டைகள், அல்லது மழைத் தண்ணீர் நிற்கக்கூடிய வேறேதும் பாத்திரங்களையும், யாதொருவரும் ஒரு தெருவில் றோட்டில், அல்லது பிரசித்த இடத்தில் அல்லது அவ்வித தெரு, றோட்டு, அல்லது பிரசித்த இடத்தின் கானில் அல்லது குடியிருக்கும் வீட்டுக்குக்கிட்டவுள்ள காணி அல்லது வளவுக்குள் போடப்படாது. அவ்வித ஊத்தை, பசளை, கஞ்சல், கூட்டிய குப்பை, அல்லது வேறெவ்வித அழுக்கையேனும், அல்லது பழைய போத்தல்கள், தகரங்கள், சட்டிகள், சிரட்டைகள், அல்லது மழைத் தண்ணீர் நிறகக்கூடிய வேறேதும் பாத்திரங்களையேனும் எறிந்துப் போடல் வேண்டும் அல்லது சங்கத்தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தகுதியான இடத்துக்குக் கொண்டுபோகப் படல் வேண்டும்.

7. களைப்புல், அல்லது அழுகுந்தன்மையுள்ள பூண்டுகள் வளர்வதினால், அல்லது பசளை, ஊத்தை, அல்லது அழுக்குச் சேர்ந்திருப்பதினால், அல்லது ஓடாமல் நிற்குந் தண்ணீரினால் அல்லது ஏதும் பாத்திரங்களுள் மழைத்தண்ணீர் நின்று ஓடாமலிருப்பதனால், குடியிருக்கும் ஒரு வீட்டுக்குக் கிட்டவிருக்கும் நிலம், அல்லது வளவு, சுகயீனத்தைக் கொடுக்கக்கூடிய மாதிரியாயிருப்பதாக, சங்கத்தலைவருக்குத் தோற்றினால் அவர் அந்நிலத்தின் சொந்தக்காரனுக்கு அல்லது ஆட்சி பண்ணுவோனுக்கு அந்நிலத்தைச் சுகத்துக்குரிய விதமாய் வைத்தற்கு அவசியமான வேலையைச்செய்ய எழுத்தில் அறிவித்தல் கொடுத்து, அவ்வித அறிவித்தலிற் சொல்லிய ஒரு நியாயமான தவணைக்குள் அவ்வேலையைச் செய்துமுடிக்கும்படி கட்டளைபண்ணலாம். குறிக்கப்பட்ட தவணைக்குள்ள சொந்தக்காரன் அல்லது ஆட்சிபண்ணுவோன் அவ்வேலையைச் செய்யத்தவறினால், அல்லது திரும்பவுமந்த நிலத்தை, முற்கூறியவண்ணம் சுகயீனம் வருத்துவிக்கக்கூடிய நிலைபரத்தில் வைத்திருந்தால், சங்கத்தலைவர் தாமே, அவ்வேலையைச் செய்விக்கலாம். இதற்காகத் தேவையான வேலையாட்களுடனும் ஆயுதங்களுடனும், பொருட்களுடனும் அவ்வித காணிக்குள் புகுவதற்கு அவருக்கதிகாரமுண்டு. இவ்விதம் செய்யப்படும் வேலைக்குரிய செலவு சொந்தக்காரனால் சங்கத்துக்குக் கொடுக்குங் கடனாகப் பாவிக்கப்பட்டு அறவிடப்படும். ஆனால், வழக்குப்போடுவது புத்தியென்று சங்கத்தலைவன் எண்ணினால், இந்தக் கட்டளைச்சட்டங்களால் வரவேண்டிய வழக்கைதையும், போடுவதற்கு இந்தப் பிரமாணத்திலிருக்கும் ஒன்றாவது சங்கத்தலைவனுக்குத் தடையாயிருக்கமாட்டாது.

8. மனுஷர் குடியிருப்பதற்குப் பாவிக்கப்படும் ஒவ்வொரு வீட்டையும், குடிசையையும், பழுதுபோகாமல் வைத்திருக்கவேண்டியது. அவ்வீட்டின் அல்லது குடிசையின் சொந்தக்காரரின் கடமையாகும். ஆனால், அந்தக் கடமையை ஒரு குத்தகைகாரன் அல்லது வீட்டிலிருப்பவன் ஏற்றுக்கொண்டானென்று சங்கத்தலைவரின் திருப்திக்குச் சொந்தக்காரன் அத்தாட்சிப்பண்ணிவிட்டால், அக்கடமை அவ்வித குத்தகைகாரன் அல்லது வீட்டிலிருப்பவனுக் குரியதாயிருக்கும்.

9. ஒரு வீட்டில் அல்லது குடிசையில்குடியிருப்பவர்களின் சுகத்துக்கு, அல்லது அயலாரின் சுகத்துக்குக்கூடாதவிதமான, பழுதான நிலைபரத்தில் அவ்விதவீடு, அல்லது குடிசை யிருப்பதாக சங்கத்தலைவருக்குத் தோற்றினால், அவ்வித வீட்டை நல்நிலைபரத்தில் வைத்திருக்கக் கடமைபூண்ட சொந்தக்காரனுக்கு அல்லது குத்தகைகாரனுக்கு, அல்லது குடியிருப்பவனுக்கு, அவ்வித வீடு அல்லது குடிசையை சுகத்துக்குரியவிதமாய் வைத்திருத்தற்கு வேண்டியவைகளைச் செய்யும்படி, சங்கத்தலைவர் அறிவித்தல் கொடுத்து அவ்வித அறிவித்தலிற் குறிக்கப்படும் நியாயமான தவணைக்குள் அதைச் செய்து முடிக்கும்படி கட்டளையிடலாம். குறிக்கப்பட்ட தவணைக்குள் அவ்வித சொந்தக்காரன் அல்லது குத்தகைகாரன் அல்லது குடியிருப்பவன் குறித்த வேலையைச் செய்துமுடிக்க அசட்டைபண்ணினால், சங்கத்தலைவரே அவ்வேலையைச் செய்விக்கலாம். அதனால் வருஞ் செலவுகள் அவ்வித சொந்தக்காரன், குத்தகைகாரன், அல்லது குடியிருப்போன் சங்கத்துக்குக் கொடுக்கவேண்டிய ஒரு கடனாக எண்ணப்பட்டு அறவாக்கப்படும். ஆனால் இப்பிரமாணத்தின்கீழ் சங்கத்தலைவர் செய்தவை யொன்றும் இந்த அதிகாரத்தில் 8 ம் பிரமாணத்தை மீறுவதனால் அவ்வித சொந்தக்காரனை அல்லது குத்தகைகாரனை அல்லது குடியிருப்பவனை எப்போதாவது தண்டிப்பதற்குத் தடையாயிராது.

10. ஒரு பட்டின எல்லைக்குள் அதற்கெனப் புறம்பாக நியமிக்கப்பட்டு வைத்திருக்கும் பிரசித்த கக்கூசு கட்டிடம் அல்லது அடைப்பு, இவைகளைத்தவிர எந்தப் பிரசித்த தெருவிலும், றோட்டிலும், பாதையிலும் அல்லது பிரசித்த இடத்திலும் யாதொருவனும் மலசலம் கழிக்கப்படாது.

மேற்கூறிய பிரமாணங்களின்கீழ் வருஷாந்தங் கொடுபடும் லைசென்சுகளுக்காக அறவிடப்படும் சலார்களின் அட்டவணை.

| | வருஷாந்தச் சலார். ரூ. | ச. | | வருஷாந்தச் சலார். ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| ரொட்டிச்சாலை (பேக்கறி) .. .. | 3 | 0 | ஐந்து அந்தருக்கு மேற்பட்ட நிறையுள்ள மீன் கருவாடு சேமித்துவைத்தல் .. | 5 | 0 |
| சாப்பாட்டுக்கடை .. .. | 3 | 0 | தோல், எலும்பு, செயற்கைப்பசளை சேகரித்தலும் ஒரு சாக்குக்கு மேற்பட்ட செய்கைப்பசளை செய்யும் பொருட்களைச் சேகரித்தலும் .. .. | 10 | 0 |
| தேய்நீர் கோப்பிக்கடை .. .. | 2 | 0 | கல்லு அல்லது கபூக் கிண்டுதல் .. | 10 | 0 |
| மாட்டுக்காலை .. .. | 5 | 0 | கிறவல் கிண்டுதல் .. .. | 10 | 0 |
| பசளைசெய்தல் .. .. | 100 | 0 | செங்கல்லு அல்லது ஓடுசெய்தல் .. | 7 | 50 |
| இரத்தமல்லது கழிவுநிணமவித்தல் அல்லது உலர்த்தல் .. .. | 100 | 0 | சுண்ணாம்புச்சூளை .. .. | 5 | 0 |
| தோல்பதனிடுதல் .. .. | 100 | 0 | மின்னரம் சேகரித்து வைக்குமிடம் அல்லது செப்பனிடும் இடம் .. .. | 25 | 0 |
| கொழுப்புருக்கல் அல்லது வடித்தல் .. | 100 | 0 | | | |
| சவர்க்காரம் செய்தல் .. .. | 50 | 0 | | | |
| இயந்திரத்தினால் தேங்காய்எண்ணெய் ஊற்றல். | 100 | 0 | | | |
| தும்புசெய்தலும் சேமித்துவைத்தலும் .. | 25 | 0 | | | |

குறிப்பு.—ரொட்டிச்சாலைகள், சாப்பாட்டுக்கடைகள், தேய்த்தண்ணீர் கோப்பிக்கடைகள் இவைகளுடைய சலார் அரைவருஷக்கணக்கில் முற்பணமாகக் கட்டலாம்.

உரை.—மேற்சொல்லிய பிரமாணங்களில் பட்டினம் என்னுஞ் சொல் 1892 ம் ஆண்டின் 18 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பிரசித்தம்பண்ணப்பட்ட முல்லைத்தீவு டிஸ்திறிக்கிலுள்ள ஒரு பட்டினத்தை அல்லது கிராமத்தைக் கருதும்.

8544